

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய துணைச் செயலாளர் முருகானந்தம், கவிதாஇவர்களது மகன் எம். அரவிந்த்குமார், நவாமரத்துபட்டி பழனிவேல், மலர்விழி இவர்களது மகள் பி.நந்தினி ஆகியோருடைய திருமணம் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

### முதல்வர் விஜய் தனது முதுகில் அழுக்கு மூட்டைகளை வைத்துக் கொண்டு

# தி.மு.க.வைப் பற்றிப் பேச என்ன தகுதியுள்ளது?

## முன்னாள் அமைச்சர் பி.கீதா ஜீவன் கண்டனம்!



தூத்துக்குடி, ஜூன் 26-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு சட்டசபையில் 23ம் தேதி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது முதல்வர் விஜய் நிகழ்த்திய உரையின் சாராம்சம் ஆணவத்தின் உச்சம் அதிகாரத் திமிரின் வெளிப்பாடு ஆகும்.

முந்தைய நாள் பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழக வெற்றிக் கழக அரசின் மீதான ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைத்தார். மின்வெட்டு - விவசாயிகள் பிரச்சினை - சீரழிந்து வரும் சட்டம் ஒழுங்கு என நியாயமான கேள்விகளை எழுப்பினார். பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட த.வெ.க.வின ரைக் கூட ஆதாரங்களுடன் குற்றம்சாட்டினார். எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விகளுக்கு தமிழ்நாடு முதல்வர் பதிலளிப்பார் என்றே எதிர்பார்த்தோம்.

ஆனால், முதல்வருக்கான மாண்புகளை மறந்து ஸ்டாண்ட்-அப் காமெடியன்போல உளறிக் கொட்டியிருக்கிறார் முதல்வர் விஜய். பதிலுரை முழுக்கவே ஆதாரமற்ற குற்ற ச்சாட்டு களும் பிதற்றல்களுமே நிறைந்திருந்தன. ஒரே மாதத்தில் 150 பாலியல் குற்றங்கள், கொலை, கொள்ளை, என சட்டம் ஒழுங்கு சீரழிவு, மின்சாரத்துறை செயலிழப்பு, விவசாயி கள் போராட்டம் உள்ளிட்டற்றவர்களுக்கு பதில்சொல்ல வக்கற்ற முதல்வர் தி.மு.க. மீது அவதூறை அள்ளித் தெளித்திருக்கிறார். பா.ஜ.க.வுடன் இணக்கமாக இருப்போம் எனக் கூறிவிட்டு, திமுகவை குறிவைத்து தாக்குவதிலேயே “நீங்கள் யார்” என்பது அம்பலப்பட்டுவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய எந்த கேள்விக்கும் பதில் அளிக்கவில்லை.

அதிலும் எங்கள் திமுக முக தலைவர் தளபதியார் குறித்து முதல்வர் விஜய் பேசி நடித்திருப்பது ஆணவத்தின் உச்சம்.. அதிகாரத் திமிரின் வெளிப்பாடு. 50 ஆண்டுகளுக்கு மேல் பொது வாழ்க்கையில் உள்ள தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை முறை மற்றும் தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளையும் அறிந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வழியிலே தமிழ்நாட்டை வளர்ச்சி அடைய செய்தவர் எங்கள் தலைவர் ஆவார். ஒன்றரை கோடி தொண்டர்களை கொண்ட தி.மு.கழக தலைவர் ஆவார். தமிழ்நாட்டில் ஜனாதிபதி ஆட்சி வரக்கூடாது என்பதற்காகத்தான் அன்று கூட்டணி கட்சிகளை த.வெ.க.விற்கு ஆதரவு தரக்கூறினார் என்பதை அனைவரும் அறிவர்.

சபையில் இல்லாதவரை குறித்து இதுவரை சட்டமன்றத்தில் இவ்வளவு அநாகரிகமாக பேசப்பட்டதில்லைஎல்லாவற்றையும் .டுகபார்த்துக்கொ ண்டிருக்கும் மக்கள் பதில் தருவார்கள்.

கழகத் தலைவர் தளபதி யாரைப் பற்றி முதல மைச்சரின் தரம் தாழ்ந்த பேச்சு மற்றும் திமுகவின் மீது அவருடைய பொய்க்குற்றச்சாட்டுகள் அனைத்தும் கண்டனத்துக்குரியது. மாண்பையும் மரபையும் கட்டிக் காக்க வேண்டும் என்ற எங்கள் தலைவரின் உத்தரவின் பெயரிலேயே மிகுந்த கண்ணியத்துடன் விமர்சிக்கி றோம். உங்கள் பாணியில் எங்களுக்கும் பேசத் தெரியாமல் இல்லை என்பதை நினைவில் கொள்க. தனது முதுகில் அழுக்குமூட்டைகளை வைத்துக்கொண்டு திமுகவை பற்றி பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது முதல்வருக்கு.

முதல்வர் விஜய் அவர்களே. இந்த வெற்றுக் வாய் சவடால்களுக்கு அஞ்சும் இயக்கம் அல்ல திராவிட முன்னேற்ற கழகம்.

எனவே உங்கள் வசனங்களை சினிமா ஷூட்டிங் கோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

சட்டமன்றத்துக்கென்று ஒரு மாண்பு இருக்கிறது; அவற்றை மறந்து சிரித்து, விசிலடிக்கும் பொழுது போக்கு மன்றமாக சட்டமன்றத்தை மாற்றியிருக்கிறார் முதல்வர் விஜய்.

அமைச்சர்கள் டூயட் பாடல்களுக்கு ஆடுகிறார்கள்.. எம்.எல்.ஏ.க்கள் விசில் அடிக்கிறார்கள்.. முதல்வர் சட்டமன்றத்தில் நாடகத்தை அரங்கேற்றுகிறார். இந்த ஆட்சியில் இன்னும் என்னென்ன கொடுமைகளையெல்லாம் பார்க்கப் போகிறோம் என்பதை நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது! என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அப்பா அனைத்துமாய் இருக்கிறார்!



ஐந்து ஆண்டின் வளர்ச்சியில்
உயர்ந்த பொருளாதாரத்தின்
ஒவ்வொரு படியிலும்
உழைப்பின் அடையாளமாய் அப்பா இருக்கிறார்!

பசியோடு பள்ளி வந்த
பச்சிளம் குழந்தையின்
சிரிப்பில் மலர்ந்த காலை உணவின் வாசத்தில்
அன்பாக அப்பா இருக்கிறார்!

பேருந்தில் பயணிக்கும்
பெண் குழந்தையின் தன்னம்பிக்கையில்,
"நானும் சாதிப்பேன்" என்ற
அவள் கனவின் சக்கரத்தில்
அப்பா இருக்கிறார்!

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்
என்ற
சமூக நீதியைச் செயலாக்கிய
ஒவ்வொரு வாய்ப்பிலும்
அப்பா இருக்கிறார்!

"பெண் படித்தால் குடும்பம் உயரும்" என்று
புதுமைப்பெண் திட்டம் எழுதிய
ஒவ்வொரு பட்டமளிப்பு மேடையிலும்
அப்பா இருக்கிறார்!

தமிழ்நாட்டின் வளர்ச்சி
காகிதத்தில் எழுதப்பட்ட புள்ளிவிவரம் அல்ல…
மக்களின் வாழ்வில் எழுதப்பட்ட
புதிய வரலாறு!
அதனால்…

பசியை போக்கிய சிரிப்பில் அப்பா இருக்கிறார்!

படிப்பைத் தொடரும் பெண்ணின் விழிகளில் அப்பா இருக்கிறார்!

சமத்துவம் மலரும் சமூகத்தின் இதயத்தில் அப்பா இருக்கிறார்!

தமிழ்நாட்டின் ஒவ்வொரு முன்னேற்றப் பாதையிலும் அப்பா இருக்கிறார்!

நிழலைத் தேடுபவர்களுக்கு
மரம் தெரியாது…

ஒரு மனிதரைத் தேடினால் முகவரி கிடைக்கும்…

ஒரு தலைவரின் சிந்தனையைத் தேடினால் தலைமுறைகள் கிடைக்கும்!

அப்பா அனைத்துமாய் இருக்கிறார்!



மருத்துவர்
**முருகதாஸ்**
விருத்தாசலம்

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் - முன்னாள் பிரதமர்

# வி.பி.சிங் பிறந்த தினம் - திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் செலுத்தினார்!

செஞ்சி , ஜூன் 26 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பனும்,முன்னாள் பிரதமருமான வி. பி. சிங்கின் 95 வது பிறந்த தின விழா நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

இந்தியாவின் 7வது பிரதமராகப் பணியாற்றிய வி.பி. சிங் (விஸ்வநாத் பிரதாப் சிங்), சமூக நீதி மற்றும் இடஒதுக்கீட்டு வரலாற்றில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியவர் ஆவார். பிற்படுத்த ப்பட்ட வகுப்பினருக்கான (OBC) மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தியதன் மூலம் இந்திய அரசியலில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார்.உத்தரபிரதேச மாநிலத்தின் அலகாபாத் பகுதியில் பிறந்த வி.பி. சிங், அம்மாநிலத்தின் முதலமைச்சராக 1980 முதல் 1982 வரை பணியாற்றிய அவர் ஒன்றிய நிதியமைச்சராகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்தார். ஊழலுக்கு எதிராகப் போராடியதன் மூலம் ‘நேர்மையான அரசியல்வாதி’ என்ற நற்பெயரைப் பெற்றார்.1989 முதல் 1990 வரை தேசிய முன்னணி கூட்டணியின் சார்பில் இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பு வகித்தார்.

சமூக நீதி: பிரதமர் பதவியை இழந்தாலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 27% இடஒதுக்கீட்டை வழங்கும் ‘மண்டல் கமிஷன்’ அறிக்கையை நடைமுறைப்படுத்தியவர். இடஒதுக்கீடு குறித்த தீவிர எதிர்ப்புகள் மற்றும் பாஜகவின் ஆதரவு விலகல் காரணமாக 1990ஆம் ஆண்டு தனதுபிரதமர் பதவியை ராஜினாமா செய்தார் வி.பி.சிங்

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் மறைந்த முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கின் 95 வது பிறந்த தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. செஞ்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கின் திருவுருவப்பட த்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் செஞ்சிஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, நகர செயலாளர்கார்த்திக்,நகர பொருளாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் சங்கர், ஜான் பாஷா, சுமித்ரா சங்கர், பொன்னம்பலம், மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரசூல் பாஷா, சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் சேகர், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கார்வண்ணன், நகர இளைஞரணி அமைப்பாளர் அன்புச்செல்வன்,முன்னாள் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ரிஸ்வான்,காரை ஊராட்சி மன்ற தலைவர்கலையரசி வெங்கடேசன், என்.ஆர். பேட்டை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், நிர்வாகிகள்தொண்டரணி பாஷா, சம்பத், கோகுல், சார்லஸ்,பஸ் ஸ்டாண்ட் செல்லன், சக்திவேல், மோகன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவிமரியாதை செலுத்தினார்.

### தாம்பரம் – வேளச்சேரி சாலை தி.மு.க. ஆட்சியிலேயே

# மேஜர் முகுந்த் வரதராஜன் பெயரில் மாற்றம்!

## Copy Past த.வெ.க. அரசுக்கு தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

சென்னை,ஜூன்.26-

அசோக சக்கர விருது பெற்ற நம் மண்ணின் வீரத்திருமகன் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், கிழக்கு தாம்பரம் – வேளச்சேரி சாலையை அவர் பெயரில் மாற்றுவதற்கான முழு அடித்தளமும் முந்தைய தி.மு.க. ஆட்சியிலேயே போடப்பட்டுவிட்டது என்பதுதான் யாராலும் மறைக்க முடியாத உண்மை!


2025 ஆகஸ்ட் மாதமே இதற்கான முன்மொழிவு செய்யப்பட்டு, அக்டோபர் 23, 2025 அன்றே தி.மு.க. அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் இதற்கான அதிகாரப்பூர்வ அனுமதியும் வழங்கப்பட்டுவிட்டது!

ஆனால், சொந்தமாக எதையும் யோசிக்கத் துப்பில்லாத இந்த Copy Paste தவெக அரசு, முந்தைய தி.மு.க. அரசின் முடிவுகளுக்குத் தங்கள் கட்சியின் ஸ்டிக்கரை ஒட்டி “நாங்கள் தான் செய்தோம்” என்று கூச்சமே இல்லாமல் வெட்கங்கெட்ட தனமாக மார்தட்டிக் கொள்கிறது!

மேஜர் முகுந்த் அவர்களின் வீரத்தின் மீது தி.மு.க. அரசுக்கு இருந்த உண்மையான மரியாதையை, இன்று தங்கள் மலிவான சுய விளம்பரத்திற்காகப் பயன்படுத்தும் இந்த Sofa Model முதலமைச்சரின் பித்தலாட்டத்தை மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

ஆட்சிக்கு வந்து எத்தனை மாதங்கள் ஆகியும், இன்னும் முந்தைய அரசு கொண்டு வந்த திட்டங்களுக்கு வீட்டில் இருந்து கத்திரிக்கோல் கொண்டு வந்து ரிப்பன் வெட்டுவதும், ஸ்டிக்கர் ஒட்டுவதும்தானா உங்களது மாற்று அரசியல்?

அடுத்தவர் உழைப்பில் குளிர் காய்வதை எப்போது தான் நிறுத்தப் போகிறீர்கள் Sticker CM? என தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம் தெரிவித்துள்ளது.



NDTV GET APP

Live TV Latest India Videos World Health

The Director of Municipal Administration in August 2025 had written a letter to the Tambaram Council to pass a resolution with a proposal to rename Tambaram - Vellachery Road as 'Major Mukund Varadharajan Road'.


Subsequently, permission was sought from the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, to place the proposal before the Corporation Council for final approval. The State Government, through a letter dated October 23, 2025, granted permission to proceed with the resolution.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் பிறந்த தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, நகர செயலாளர்கார்த்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அ. இராசமாணிக்கம்
## ஜூன் 26 (2016)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீது பற்றுக் கொண்டு, மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**நாகை நிலவள வங்கி தலைவராகவும், நாகை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், கீழையூர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**1971–ல் நாகை சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**